எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், 110, அண்ணா சாலை, சென்னை–2

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.சி.ந.வரதராவ், இணை இயக்குநர்.

இயக்கக செ.மு. ஆணை எண். இ3/8869/2022 நாள்:04.10.2023.

பொருள்: பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2 – கருணை அடிப்படையில் திரு.சு.சுரேஷ், இளநிலை உதவியாளராக பணி நியமனம் – 23.03.2022 பிற்பகல் பணியேற்றது – தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 23.03.2022 பிற்பகல் முதல் வரன்முறை செய்தல் – 23.03.2022 பிற்பகல் முதல் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. ஆணையரக செயல்முறை ஆணை எண்.பி1/19940/2020, நாள் 22.03.2022.
2. ஆணையரக செயல்முறை ஆணை எண்.இ3/8869/2022, நாள்:23.03.2022.
3. இயக்கக கடித எண்: இ3/8869/2022, நாள்:26.06.2023
4. அரசாணை நிலை எண்.100 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
6. அரசாணை (4ப) எண்: 04, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1–2)த்துறை, நாள்:14.08.2023.

-----

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையைச் சார்ந்த அரசு எழுதுபொருள் அலுவலகத்தில் மேஸ்திரியாக பணிபுரிந்து 15.07.2019 அன்று காலஞ்சென்ற திரு.ஜெ.சுகுமாரன், என்பவரின் வாரிசுதாரரான அவரின் மகன் திரு.சு.சுரேஷ், என்பவர் இளநிலை உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பொது கல்வி தகுதியான பத்தாம் வகுப்புப் தேர்ச்சி மற்றும் வயது தகுதி உள்ளிட்ட அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளதைத் தொடர்ந்து, பார்வை 1–ல் காணும் 22.03.2022 நாளிட்ட ஆணையரக செயல்முறை ஆணையில் தனியரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிகமாக பணிநியமனம் செய்து எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2ல் பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

Scanned with CamScanner

2) பார்வை–1 மற்றும் 2ல் காணும் ஆணையரக செயல்முறை ஆணையினைத் தொடர்ந்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 23.03.2022 பிற்பகல் பணியேற்பு செய்து இயக்ககத்தில் பணிபுரிந்து வருகிறார்.

3) கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாளான 23.03.2022 பிற்பகல் தனியரது பணியினை வரன்முறை செய்து அரசின் ஆணை பெற்று வழங்க கோரி பார்வை–3ல் காணும் 26.06.2023 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

4) பார்வை 6–ல் காணும் அரசாணை (4ப) எண்: 04, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1–2)த்துறை, 14.08.2023 நாளிட்ட அரசாணையில் அரசாணை (நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(M)த் துறையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என்றும், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 23.01.2020–ன்படி பரிசீலனை செய்து, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.சு.சுரேஷ், என்பவரின் பணியினை, தமிழ்நாடு அமைச்சு பணியில், தனியர் பணியில் சேர்ந்த் நாளான 23.03.2022 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்குரிய உடற் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன் முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

5) மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெற தனியர் தகுதியுடையவராகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த 23.03.2022 பிற்பகல் அன்று உடல் தகுதி குறித்த மருத்துவ தகுதிச் சான்றிதழினை சமர்ப்பித்துள்ளார். தனியர் சமர்ப்பித்துள்ள மருத்துவச் சான்றிதழின்படி, தனியர் அரசுப்பணியில் சேருவதற்கான உடல் தகுதியை பெற்றுள்ளார்.

7) பார்வை 6–ல் காணும் அரசாணை (4ப) எண்: 04, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1–2)த்துறை, 14.08.2023 நாளிட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.சு.சுரேஷ், இளநிலை உதவியாளரின் தற்காலிக பணியினை, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளான 23.03.2022 பிற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, அந்நாள் முதல் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

8) தனியர், மேற்படி இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்றும் தகுதிகாண் பருவ காலத்தில் ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் என்றும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

9) தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களுக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

சி.ந.வரதராவ்,
இணை இயக்குநர்.

பெறுநர்

திரு.சு.சுரேஷ்,
இளநிலை உதவியாளர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
இயக்ககம், சென்னை-2.
(இணைப்பு அரசாணை (4ப) எண்: 04, தமிழ் வளர்ச்சி
மற்றும் செய்தி (எஅ1-2)த்துறை, நாள்:14.08.2023)

நகல் பெறுநர்

1. இயக்குநரின் நேர்முக உதவியாளர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை-2.
2. உதவி இயக்குநர் (நிருவாகம்), எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை-2.
3. சம்பள கணக்கு அலுவலர், சம்பள கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை-8.
4. கண்காணிப்பாளர் 'எச்' எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை-2.
5. கண்காணிப்பாளர் 'இ' பிரிவு / இ4 உதவியாளர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை-2.

உதிரி-2 நகல்கள்.

நகல் இடம் பெறல்:

1. இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக
2. இணை இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

4/10/23

Scanned with CamScanner

155

1924 - 2023

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.சு.சுரேஷ் இளநிலை உதவியாளர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரகம், சென்னை-02 - பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1-2)த்துறை**

அரசாணை (4ப) எண். 04

நாள் 14.08.2023
சோபகிருது, ஆடி – 29
திருவள்ளுவராண்டு- 2054

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த(எம்)த் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை(நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
3. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரக செயல்முறை ஆணை எண்.பி1/19940/2020, நாள் 22.03.2022.
4. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரின் கடிதம் எண். இ3/8869/2022, நாள் 10.03.2023.

======

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

3. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்தில் மேஸ்திரியாகப் பணிபுரிந்து 15.07.2019 அன்று காலமான திரு.ஜெ.சுகுமாரன் என்பவரின் மகன் திரு.சு.சுரேஷ், என்பவர் இளநிலை உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பொது கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு, தேர்ச்சி பெற்றுள்ளதாலும், அவருடைய பிறந்த தேதி 21.04.1993 என்பதாலும், அவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தேவையான கல்வி, வயது உட்பட அனைத்து தகுதிகளையும் பெற்றிருந்ததால், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

Scanned with CamScanner

ஆணையரது செயல்முறை ஆணையில், சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 23.03.2022 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரது கடிதத்தில், திரு.சு.சுரேஷ், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 23.03.2022 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்திரவிடுமாறு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்கு பின்னர் அதனை ஏற்று, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சு.சுரேஷ் என்பவரின் பணியினை, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 23.03.2022 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்குரிய உடற் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.2802/ட்டி2/2023-1, நாள் 19.04.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.5186214/G1/2023, நாள் 10.08.2023 ஆகியவற்றின் வழியாக பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.செல்வராஜ்
அரசு செயலாளர்

**பெறுநர்**

இயக்குநர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-2
திரு.சு.சுரேஷ், இளநிலை உதவியாளர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரகம், சென்னை-2
(எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் வழியாக)

**நகல்:-**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (ட்டி-2)த் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மை (ஜி)த் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிநகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner